## திராவிட மாடல் அரசின் முதல்வர் – கழகத் தலைவர்

# மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை தமிழ்நாடு முழுதும் சிறப்பாகக் கொண்டாடுவோம்!

### கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, பிப்.24-

சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில தலைவர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் தலைமையில் மாநிலச் செயலாளர் செங்குட்டுவன் முன்னிலையில் கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் மாநில நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

கழகத் தலைவர் மக்கள் முதல்வர் அவர்களது பிறந்த நாள் மாநிலம் முழுவதும் சிறப்பாக கொண்டாடுதல் மற்றும் அணிசார் செயல்பாடுகள் உள்ளிட்ட முக்கிய தீர்மானங்கள் கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்டன.

அது வருமாறு:-

திராவிட மாடல் அரசின் முதல்வர் கழகத்தலைவர் அவர்களின் 72வது பிறந்த நாளை தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடுவோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் எனும் மாபெரும் இயக்கத்தின் தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் இந்திய திருநாட்டின் முதல்வர்களுக்கெல்லாம் முன்மாதிரி முதல்வராக, பாசிசத்தை அடியோடு ஒழிக்க உறுதி பூண்டு செயலாற்றி வரும் நம் முதல்வர், தமிழ்நாட்டை அனைத்து துறைகளிலும் முதன்மையான மாநிலமாக உருவாக்கி காட்டியதன்மூலம் இந்திய திருநாட்டின் பொரளாதார வல்லுநர்கள், அறிஞர்கள் அனைவரும் திருப்பிப்பார்க்கும் வகையில் செயலாற்றி வரும் நம் கழகத்தலைவர், தமிழ்நாட்டின் முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்கள் வருகின்ற மார்ச் 1ல் அகவை 72ல் கால் பதிக்கும் நாள். மனிதநேய திருநாள், உலகத் தமிழர்கள் எழுச்சித் திருநாள், கழகத்தலைவரின் பிறந்த நாளை மார்ச் 1ல் இருந்து, மாதம் முழுவதும் நமது அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் சார்பில் அனைத்து மாவட்டங்கள் மாநகரங்கள், நகராட்சிகள், ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளில்,

திமுக அமைப்புசாரா ஓட்டுனர்கள் பணிபுரியம், ஆட்டோக்கள், கார்கள், கனரக வாகனங்கள் தனியார் வாகனங்கள், உள்ளிட்ட அனைத்து வாகன நிறுத்தங்களிலும், மார்ச்-1ல் மாவட்ட, மாநகர, நகர, பேரூர் ஒன்றிய அளவில் நியமனம் செய்யப்பட்டுள்ள, அணியின் நிர்வாகிகள் கழகக் கொடியேற்றி, ஓட்டுனர்கள், பொதுமக்கள் மற்றும் ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, ஒலி பெருக்கி ஏற்பாடு செய்து, தாய் கழக நிர்வாகிகளின் ஒத்துழைப்போடு, இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவதெனவும், மேற்படி நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்திமுடித்திட, மாநில நிர்வாகிகள் மண்டல அளவில் மாவட்ட, மாநகர நகர, ஒன்றிய பேரூர் நிர்வாகங்களுடன் தொடர்பு கொ:டு அனைத்து சிறப்பாக ஏற்பாடு செய்திடுவது என மாவட்டங்களிலும் தீர்மானிக்கப்பட்டது.





தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாடுவதையொட்டி, தி.மு.க.அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாநில நிருவாகிகள் ஆலோசனைக் கூட்டம், மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணிச் தலைவர் டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன்,மாநில துணைச் செயலாளர்கள் கே,தினகரன் ஏ,ஆர.டி.உதயசூரியன், எஸ்.ராம்குமார்,எம்.சிவராஜ்,சி. செல்லதுரை, டாக்டர் ஆர்.சி.எம்.விஷ்ணு பிரபு, ஏ.கே.பூபதி மற்றும் தங்கம்,ஸ்ரீதர் ரங்கராஜ் ஆகியோர் பங்கேற்றனர். கழகத் தலைவர் பிறந்தநாள் நிகழ்வாக மாவட்டந் தோறும் விளையாட்டுப் போட்டிகளும், நலத்திட்ட உதவிகள் வழங்குவது, ஒலிம்பிக் விளையாட்டின் உள்ள "தேக்வாண்டோதற்காப்புக் கலை போட்டியினை மாபெரும் அளவில் நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

திராவிட மாடல் ஆட்சியின் 4 ஆண்டு கால சாதனைகள் சிறப்புத் திட்டங்களை துண்டுபிரசாரம் மூலம் மக்களுக்கு எடுத்துரைப்போம்

கனிவான சிந்தனையுடன் திட்டங்களை தீட்டி, அதன் பலன்களை கடைகோடி மக்களும் பெற்றிடும் வகையில், கருனைவடிவான, மனித நேய நாயகரின் திராவிட மாடல் ஆட்சியல், உலகமே பாராட்டும் வகையில் செயல்படுத்தி வரும் உன்னத திட்டங்களாம்,

- மகளிர் உரிமைத்தொகை மாதந்தோறும் ரூ.1000/-,
- கட்டணமில்லா விடியல் பேருந்து,
- பள்ளிக்கு வரும் 1 முதல் 5ம் வகுப்பு மாணவச் செல்வங்களுக்கு பசிப்பிணியை போக காலை சிற்றுண்டிதிட்டம்.
- இல்லந்தோறும் கல்வித் திட்டம்.
- மக்களை தேடி மருத்துவத் திட்டம்
- நம்மைக்காக்கும் 48 மணி நேர மருத்துவ திட்டம்
- 10 லட்சம் கோடியில் தொழில் முதலீடுகள் திட்டம் அதனால் பல லட்சம் பெண்கள் - இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு.
- தமிழ்ப்புதல்வன் திட்டம் மூலம் மாதந்தோறும் ரூ.1000/-
- புதுமைப்பெண் திட்டம் மூலம் மாதந்தோறும் ரூ.10000 வழங்கும் திட்டம்.
- நான் முதல்வன் திட்டம்
- 2 லட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு திட்டம்.

என பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியதின் மூலம், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்கி இந்திய பொருளாதார நிபுணர்கள், அறிஞர்கள், புல்லியல் துறை அறிஞர்கள், பத்திரிகைகள் பாராட்டுகின்ற ஆட்சியை வழங்கி வரும் திராவிட இயக்கத்தின் நான்காம் தலைமுறை தமிழக முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கு இக்கூட்டம் தனது நெஞ்சார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களை யும் தெரிவித்து பெருமை கொள்கிறது.

தேசீய கல்வி, கொள்கை என்கிற பெயரால் இந்தியை திணிக்க முயலும் ஒன்றிய அரசிற்கு கடும் கண்டனம்

- திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் மனித நேயத்தலைவர் தமிழக முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்களின் பெரும் முயற்சி, சீரிய சிந்தனையால் தமிழ்நாட்டின், வளர்ச்சியை வலுப்படுத்தி

இந்தியாவிலேயே முதல் மாநிலமாக்கி வருகிறார்.

- மேற்படி தமிழக வளர்ச்சியை தடுத்திட ஒன்றிய அரசு பல்வேறு வகையில் முயற்சித்து வருகிறது.
- மாநில சுயாட்சியை சிதைத்தல்
- தேசீய கல்வி கொள்கை என்கிற பெயரால் இந்தியை திணித்தல்.
- ஒன்றிய அரசின் பட்ஜெட்டில், தமிழ்நாட்டை அடியோடு வஞ்சிப்பது.
- தமிழ்நாட்டிற்கு சேர வேண்டிய நியாயமான நிதிப்பகிர்வை முற்றிலும்நிறுத்துவது.
- தமிழ் மொழியை சிதைப்பது.
- மொழி சிதைந்தால் இனம் சிதையும்!
- இனம் சிதைந்தால் தமிழ் பண்பாடு சிதையும்!
- பண்பாடு சிதைந்தால் தமிழ் அடையாள போய் விடும்.
- அடையாளம் சிதைந்தால் தமிழன் எனும் தகுதியை இழக்கச் செய்வது.
- தமிழன் என்கிற தகுதியை இழந்தால் நாம் வாழ்ந்து பயனில்லை.
- இது தான் ஒன்றிய அரசின் சூழ்ச்சி திட்டம்.
- எனவே மொழியையும், இனத்தையும் நாட்டையும் காத்திட வேண்டும் இம் மூன்றையும் காத்திட.
- பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் கண்டெடுத்த நம் கழகத்தை காத்திட வேண்டும். கழகம் காத்திட, நம் ஆட்சியை காத்திட வேண்டும்.
- கழகத்தையும் ஆட்சியையும் காத்திட ஓய்வறியா உழைப்பாளி தமிழக முதல்வர் மாண்புமிகு தளபதியார் மற்றும் திராவிட இயக்கத்தின் ஐந்தாம் தலைமுறை மாண்புமகு துணை முதல்வர் உதயநித ஸ்டாலின் ஆகியோான் அறிவுரை ஏற்று செயல்பட உறுதியேற்போம்.

தமிழக வளர்ச்சியை தடுத்திட அனைத்து வழிமுறைகளையும் கையாளும் ஒன்றிய அரசையும், அதற்கு துணை போகும் பாசிச சக்திகளையும் இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

திராவிட இயக்கத்தின் ஐந்தாம் தலைமுறை மாண்புமிகு துணை முதல்வரை ஒருமையில் பேசிய தற்குறி அண்ணாமலைக்கு கடும் கண்டனம்

தமிழகத்தின் துணை முதல்வர், சனாதனவாதிகளின் சிம்ம சொப்பணம், இளைஞர்களின் எழுஞாயிறு, தமிழகத்தின் துணை முதல்வர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களை, அநாகரீகமாக, நாவடக்கம் இல்லாமல், ஒருமையில் பேசிய தற்குறி அண்ணாமலைக்கு இக்கூட்டம் தனது வன்மையான கண்டனத்தை தெரிவிப்பத்தோடு, நாவடக்கத்தோடு பேசுமாறு இக்கூட்டம் எச்சரிக்கிறது.

மண்டலம் தோறும் மாவட்ட, மாநில நகர, ஒன்றிய, பேரூர் அளவிலான அணி நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டங்கள்

தி.மு.க. அமைப்பு சாரா அணியின் மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், அளவிலான நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டங் களை ஏற்பாடு செய்து, அதில் அணியின் வளர்ச்சி பணிகள், 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள், திராவிட மாடல் அரசின் முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்களின் சாதனைகள், திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்த்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

இந்த திணிப்பை எதிர்த்திடும் வகையில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு வாரம் தொடர் பிரச்சாரமாக,

- ஒரு வாரத்திற்கு தொடர்ச்சியாக இல்லங்களின் முன் வாசலில் "இந்தி திணிப்பை எதிர்ப்போம்" வாசகத்துடன் கோலமிட வேண்டும்.
- பேருந்து நிறுத்தங்கள், ஆட்டோ, கார், டெம்போ டிராவல்ஸ் நிறுத்தங்களின் "இந்தி திணிப்பை நிறுத்து" என்கிற பதாதைகள் வைக்கப்பட வேண்டும்.
- ஆட்டோக்கள், கார்கள், டெம்போ டிராவல்ஸ்களின் பின், "இந்தி திணிப்பை நிறுத்து" என்கிற ஸ்டிக்கரை ஒட்டலாம்.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## விழுப்புரம் வடக்கு மாவட்டம்

## மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல் தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு!

" திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்கள் மாவட்ட பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால்; விழுப்புரம் வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, பிப்ரவரி 22 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்." என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கு டாக்டர் ப.சேகர் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**விழுப்புரம் வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவராக,**

**டாக்டர் ப.சேகர்,** 28, ஜெயபுரம் 2வது தெரு, திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18
நாள்- 22.02.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம், பாலசமுத்திரம்புதூர் ஊராட்சி, தொட்டியபாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட முகாமை துவக்கி வைத்து கலைஞரின் கண்ணொலி காப்போம் திட்டத்தின் கீழ் பள்ளி மாணாக்கர்களுக்கு மூக்கு கண்ணாடிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா, வட்டார மருத்துவ அலுவலர் மரு.பி. விஜயகுமார், காங்கேயம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.கே.சிவானந்தன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் கே.சண்முகசுந்தரம் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மார்ச் 1 பிறந்தநாள் காணும் கழகத் தலைவர் –

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை தமிழ்நாடு முழுதும் சிறப்பாகக் கொண்டாடுவோம்!

### கழக தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, பிப்.24-

தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் 22.02.2025 சனிக்கிழமை காலை 10.00 மணி அளவில், தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக தொழிலாளர் அணி மாநில துணைச் செயலாளர்கள் பி.டி.சி. வெ.பாலு, இராஜா குப்புசாமி, கொல்லாபுரம் ச.இராஜேந்திரன், ஆர்.வரதன், மு. ராஜகாந்தம், கோவை நா.தமிழ்செல்வன், சேலம் காசி, கரூர் விஜயகுமார் அ.பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

மார்ச்1 அன்று பிறந்த நாள் விழா காணும் கழகத் தலைவரும் - திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை கழகத் தொழிலாளர் அணியின் சார்பாக, மாவட்ட நிர்வாகிகள் அந்தந்த மாவட்டக் கழக செயலாளரின் ஆலோசனைகளை பெற்று ஒன்றியம், பகுதி, நகரம் மற்றும் பேரூர் என அனைத்து பகுதிகளிலும் ஏழைஎளியோர்க்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும், கழகக் கொடியேற்றி இனிப்புகள் வழங்கியும் தமிழ்நாடு முழுவதும் மிகச் சிறப்பாக கொண்டாட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் மாநில நிர்வாகிகள் அந்தந்தப் பகுதிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென தீர்மானிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய கல்வி நிதியை தராமல் புறக்கணிக்கும் ஒன்றிய மோடி அரசை இந்தக் கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதோடு, தொழிலாளர் அணி சார்பாக மாவட்ட தலைநகரங்களில் மத்திய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்திட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

அறிஞர் அண்ணா அவர்களால் கொண்டு வரப்பட்ட இரு மொழி கொள்கைக்கு எதிராக மும்மொழி திட்டத்தை திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக போராடி, தமிழையும் தமிழ் நாட்டையும் பாது காக்கும் அரணாய் திகழும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் கரத்தை வலுப்படுத்தி, அவர் பின்னால் அணி வகுக்கும் கறுப்பு - சிகப்பு சிப்பாய்க ளாய் நின்றிட தி.மு.க. தொழிலாளர் அணி நிர்வாகிகள் உறுதி ஏற்கிறது.

அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்த இந்தியர்களை கைவிலங்கிட்டு நாடு கடத்திய அமெரிக்காவை கண்டிக்காத தாய் நாடு, இந்திய தேசம் என்று கூக்குரலிடும் போலி வேடதாரியான மோடியின் பா.ஜ.க. அரசை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தொழிலாளர் அணி மாநில மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் மார்ச் மாதம் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் மகேஷ் பொய்யா மொழி மற்றும் அணிச் செயலாளர் பி.டி.சி. செல்வராஜ் தலைமையில் மாநில துணைச் செயலாளர்கள் முன்னிலையில் நடத்திட தீர்மானிக்க ப் பட்டது. இக்கூட்டத்தில் கலந்து கொள்ள மாவட்ட தொழிலாளர் அணி நிர்வாகிகள் தங்களது மினிட் நோட்டை கொண்டு வந்து, அணிச் செயலாளர்களிடம் காண்பித்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும்.

2026 நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பணி தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தொழிலாளர் அணி நிர்வாகிகள் மாவட்ட கழக செயலாளரோடு கழகப் பணியில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

தொழிலாளர் அணி ஒன்றியம், பகுதி, நகரம், பேரூர், வட்டம், வார்டு வரை நிர்வாகிகள் நியமிக்கப்பட வேண்டுமெனவும் அப்பட்டியலை, அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் கலந்து பட்டியல் தயார் செய்து தலைமைக்கு அனுப்பிட வேண்டும்.

அணி நிர்வாகிகள் சமூக வலைதளங்களில் கணக்கு துவங்கிட வேண்டும். சமூக வலைதளத்தில் தலைமைக் கழகத்தின் சார்பில் அனுப்பப்படும் தகவல்களை மற்ற குழுவுக்குப் பகிரப்பட வேண்டும்.

தொழிலாளர் நலச் சட்டங்களை திருத்தி தொழிலாளர் நலனுக்கு எதிராக செயல்படும் மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

ஜனநாயகத்தின் தூணாக கருதப்படும் பத்திரிகை சுதந்திரத்தை முடக்கி வரும் மோடி அரசு அதை நிரூபிக்கும் வகையில் விகடன் இணையதளம் முடக்கி ஜனநாயகத்தை அழிக்கப் பார்க்கும் ஒன்றிய மோடி அரசை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் தடங்கம் சுப்பிரமணியம் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு. **பி.தர்மசெல்வன்** ( எண்.5/120, டீ.க்கடை, கோடி அள்ளி, கூத்தப்பாடி, தருமபுரி 636 810.) அவர்கள் **தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக** நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள்

இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18
நாள்- 22.02.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திருப்பூர் வடக்கு மாவட்டம்

## திருப்பூர் வடக்கு மாநகரக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

திருப்பூர் வடக்கு மாநகரச் செயலாளராக பொறுப்பு வகித்து வந்த ந.தினேஷ்குமார் அவர்கள், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற

திரு. **ஈ.தங்கராஜ்,** (5/392, வெங்கமேடு, அங்கேரிப்பாளையம், திருப்பூர்-641603.) அவர்கள் திருப்பூர் வடக்கு மாநகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகரக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18
நாள்- 22.02.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



கழக தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் அணியின் செயலாளர் பி.டி.சி.ஜி. செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது.இதில் மாநில துணைச் செயலாளர்கள் பி.டி.சி.பாலு,ராஜா குப்புசாமி, கொல்லாபுரம் எஸ். ராஜேந்திரன்,ஆர். வரதன்,எம்.ராஜகாந்தம்,ந. தமிழ்ச்செல்வன்,சேலம் சி.காசி,பி. விஜயகுமார்,அ.பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கழகத் தலைவர்,முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை மாவட்டம் தோறும் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடுவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.